## FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

8073049

C

1. District மாவட்டம் : நாமக்கல் PS காவல்நிலையம்: ஊ.த.க பிரிவு Year ஆண்டு: 2019 FIR No. மு.த.அ. எண்: 07/AC/2019 Date நாள்: 30-05-2019

2. (i) Act சட்டம்: The P.C. Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 Sections பிரிவுகள்: 7(a)

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from நாள் முதல்: 28.05.2019 Date to நாள் வரை: காலை சுமார் 10.45 மணிக்கு

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை

(b) Information Received at PS Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 30.05.2019 Time நேரம் : காலை 09.50 மணி

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்: Volume-II Time நேரம் : காலை 09.50 மணி

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினியில் டைப் செய்யப்பட்ட புகார் மனு.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 3 கி.மீ. கிழக்கு, துறையூர் ரோடு, நாமக்கல் டவுன்

Beat Number முறைக் காவல் எண் (b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் K.இலக்கியச்செல்வன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் திரு.கி. திருவேந்திரன்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு வயது-34 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —

Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம் —

(f) Occupation : தொழில் போட்டோகிராபி ஸ்டுடியோ (g) Address : முகவரி — 99 மீடியா போட்டோகிராபிக் ஸ்டுடியோ 90 B துறையூர் ரோடு, நாமக்கல்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டுக்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் தேவையெனின் தனித்தாள் இணைக்கவும்!

திரு. வரதராசு, வருவாய் உதவியாளர், நகராட்சி அலுவலகம், நாமக்கல்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / Involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:

விவரம் தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed .................... Rank .................... to take up the Investigation / Refused investigation / transferred to PS ....................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .................... பதவி .................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் தெரிவிப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

30-5-19

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

30.05.2019 அன்று 12.45 மணிக்கு

Name: பெயர் A.T. [illegible]
Rank: நிலை ....................No. எண் ..........
காவல் துணைக் கண்காணிப்பாளர்,
[illegible] பிரிவு, நாமக்கல்.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.5.16(HCL-12)p 2

30/05/19

<u>நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.7/AC/2019 u/s 7(a) of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018-ன்படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவலறிக்கையின் வரிசை எண்.12-ன் தொடர்ச்சி...</u>

இன்று 30.05.2019-ஆம் தேதி வியாழக்கிழமை காலை 09.50 மணிக்கு காவல் துணை கண்காணிப்பாளராகிய நான் நிலைய அலுவலில் இருந்தபோது நாமக்கல் மாவட்டம், நாமக்கல் டவுன், துறையூர் ரோட்டில் ஐ மீடியா என்ற பெயரில் போட்டோகிராபிக் ஸ்டுடியோ நடத்திவரும் திரு.கு.கிருஷ்ணன் என்பவரின் மகன் திரு.K.இலக்கியச் செல்வன் என்பவர் நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் ஆஜராகி எழுத்து மூலமான புகாரினை சமர்ப்பித்தார். அந்த புகாரின் விபரம் பின்வருமாறு:- அனுப்புதல்: K.இலக்கியச் செல்வன் (வயது-34), த/பெ.கு.கிருஷ்ணன், ஐ மீடியா (போட்டோகிராபிக் ஸ்டுடியோ), 90B துறையூர் ரோடு, நாமக்கல். பெறுதல்: உயர்திரு.காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள், இலஞ்ச மற்றும் ஊழல்தடுப்பு பிரிவு, நாமக்கல். ஐயா, நான் நாமக்கல் டவுன், துறையூர் ரோட்டில் ஐ மீடியா என்ற பெயரில் போட்டோகிராபிக் ஸ்டுடியோ நடத்தி வருகிறேன். எனது தொழிலை மேம்படுத்துவதற்காக நாமக்கல் HDB Bank-ல் வீட்டு அடமான லோனுக்கு Apply செய்தேன். பேங்க் ஊழியர் என்னிடம் நகராட்சியில் தொழில்வரி இரசீது பெற்று வருமாறு கூறினர். ஆகையால் தொழில்வரி செலுத்த வேண்டி நாமக்கல் நகராட்சி அலுவலகத்தில் கடந்த 08.04.2019 அன்று விண்ணப்பித்தேன். பல நாட்கள் கடந்தும் எந்த தகவலும் இல்லாதபட்சத்தில் கடந்த 23.05.2019 அன்று நகராட்சி அலுவலகம் சென்று "அ" பிரிவில் உள்ள திருமதி.K.பத்மாவதி என்பவரை சந்தித்தேன். அவர் மாடியில் உள்ள ரெவின்யூ அசிஸ்டெண்ட் திரு.வரதராசு என்பவரை சந்திக்கச் சொன்னார். பின்னர் மாடியில் உள்ள அவரது இருக்கைக்கு சென்று பார்த்தபோது அவர் இல்லாததால் அருகில் உள்ளவர்களை கேட்டேன். அவர் வெளியில் சென்றிருப்பதாக கூறியதால், அங்கு கதவில் ஒட்டப்பட்டு இருந்த பெயர் மற்றும் செல்போன் எண் கொண்ட பட்டியலைப் பார்த்து ரெவின்யூ அசிஸ்டெண்ட் திரு.வரதராசு அவர்களின் செல்போன் எண்.8056588616-க்கு தொடர்பு கொண்ட போது, தொழில்வரி கட்டுவதற்கான அனைத்து பைலையும் தயார் செய்து விட்டு அவரே என்னை தொடர்பு கொள்வதாக கூறினார். கடந்த 28.05.2019-ஆம் தேதி காலை சுமார் 10.45 மணிக்கு எனது கடைக்கு வந்த திரு.வரதராசு அவர்கள் என்னிடம் உங்கள் பைல் சம்மந்தமாக

வெரிபிகேசனுக்கு வந்துள்ளேன் என்று சொல்லி எனது கடையை பார்வையிட்டார். என்னிடம் தொழில் பற்றி கேட்டறிந்தார். பின்னர் அவர் என்னிடம் உங்களுடைய தொழில்வரி பைலை ரெடி செய்து கொடுக்க ஆபீசில் நிறைய செலவாகும், அதனால் எனக்கு 3,000/- ரூபாய் தனியாக கொடுத்து விடுங்கள் என்று கேட்டார். அதற்கு நான் என்னிடம் அவ்வளவு பணம் இல்லையென்று சொன்னேன். அதற்கு அவர் வேண்டுமானால் 500/- ரூபாய் குறைத்துக் கொண்டு 2,500/- ரூபாய் கொடுத்து விடுங்கள், அப்போது தான் உங்களது தொழில்வரி சம்மந்தமான பைல் ரெடியாகும் என்று சொன்னார். அதற்கு நான் பார்த்து செய்து கொடுங்கள் சார் என்று சொன்னேன். நான் கேட்ட பணத்தை ரெடி செய்துவிட்டு எனக்கு போன் செய்யுங்கள் என்று சொல்லிவிட்டு சென்றுவிட்டார். ஆனால் அவருக்கு லஞ்சமாக 2,500/- ரூபாய் கொடுத்து தொழில்வரி ரசீது வாங்க எனக்கு விருப்பமில்லை. எனது தொழிலை மேம்படுத்த HDB பேங்க்கில் லோன் பெற தொழில்வரி ரசீது வேண்டும் என்பதால், இன்று 30.05.2019-ஆம் தேதி நாமக்கல் நகராட்சியில் பணிபுரியும் ரெவின்யூ அசிஸ்டெண்ட் திரு.வரதராசு என்பவர் என்னுடைய தொழில்வரி சம்மந்தமான பைலை ரெடி செய்து கொடுக்க லஞ்சமாக கேட்ட பணம் ரூ.2,500/-உடன் அவரை சந்திக்க உள்ளேன். ஆகையால் ரெவின்யூ அசிஸ்டெண்ட திரு.வரதராசு அவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு ஒப்பம்/-xxx(K.இலக்கியச் செல்வன்)30/05/19. இடம்: நாமக்கல் நாள்: 30.05.2019.

மேற்கண்ட புகார் மனுவை பெற்று, படித்துப் பார்த்து, புகாரில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகளின் அடிப்படையில் கைது செய்யப்படக்கூடிய குற்றம் ஏதேனும் செய்யப்பட்டுள்ளதா என்றும், எதிரிக்கும், புகார்தாரருக்கும் தனிப்பட்ட முறையில் முன்விரோதம் உள்ளதா என்பது குறித்தும் இரகசிய விசாரணை மேற்கொண்டதில் எதிரி மீது குற்ற வழக்கு பதிவு செய்ய போதுமான முகாந்திரம் இருப்பதும், புகார்தாரருக்கும், எதிரிக்கும் முன்விரோதம் ஏதுமில்லை என்றும், புகார்தாரருடைய புகார் நம்பகத் தன்மை கொண்டது என்பதும் தெரிய வந்ததால், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரகத்தில் வாய் மொழியான ஒப்புதல் பெற்று இன்று 30.05.2019-ஆம் தேதி மதியம் 12.00 மணிக்கு நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.07/AC/2019, u/s 7(a) of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018-ன்படி மேற்படி எதிரி மீது குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது.

பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார்தாரரின் புகார் மனு ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி மற்றும் தலைமைக் குற்றவியல் நீதித்துறை நடுவர், நாமக்கல் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்து, வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன்.

30/05/19

(A.T. ஜெய்குமார்)
காவல் துணை கண்காணிப்பாளர்,
ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
நாமக்கல்.